ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருநீர்மலை

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக3மாந்தமஹாதே3ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருநீர்மலை

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த3யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்3ய பூ4ஷணம் ।
ஸ்ரீமத்3வேங்கடநாதா2ர்யம் வந்தே3 வேதா3ந்ததே3ஶிகம் ॥ 1 ॥

ஸ்ரீஶைலேஶ த3யாபாத்ரம் தீ4ப4க்த்யாதி3கு3ணார்ணவம் ।
யதீந்த்3ரப்ரவணம் வந்தே3 ரம்யஜாமாதரம் முநிம் ॥ 2 ॥

லக்ஷ்மீநாத2ஸமாரம்பா4ம் நாத2யாமுநமத்4யமாம் ।
அஸ்மதா3சார்யபர்யந்தாம் வந்தே3 கு3ருபரம்பராம் ॥ 3 ॥

யோ நித்யமச்யுதபதா3ம்பு3ஜயுக்3மருக்ம -
வ்யாமோஹதஸ்ததி3தராணி த்ரு'ணாய மேநே ।
அஸ்மத்3கு3ரோர்ப4க3வதோஸ்ய த3யைகஸிந்தோ4:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்3யே ॥ 4 ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ4தி:
ஸர்வம் யதே3வ நியமேந மத3ந்வயாநாம் ।
ஆத்3யஸ்ய ந: குலபதேர்வகுளாபி4ராமம்
ஸ்ரீமத் தத3ங்க்4ரியுக3ளம் ப்ரணமாமி மூர்த்4நா ॥ 5 ॥

பூ4தம் ஸரஶ்ச மஹதா3ஹ்வய ப4ட்டநாத2
ஸ்ரீப4க்திஸார குலஶேக2ர யோகி3வாஹாந் ।
ப4க்தாங்க்4ரிரேணு பரகால யதீந்த்3ர மிஶ்ராந்
ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் ॥ 6 ॥

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_{3}$ருமுக$_{2}$மநதீ$_{4}$த்ய ப்ராஹ வேதா$_{3}$நஶேஷாந்
நரபதிபரிக்லு'ப்தம் ஶுல்கமாதா$_{3}$துகாம:।
ஶ்வஶுரமமரவந்த்$_{3}$யம் ரங்க$_{3}$நாத$_{2}$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_{3}$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தட மதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆
முன்னாள் கிழி அறுத்தான் என்றுரைத்தோம் ⋆
கீழ்மையினிற் சேரும் வழி அறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆
வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழி அறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆
உன் சேவடி செவ்வி திருக்காப்பு ॥ **1.1.1** ॥

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆

படை போர் புக்கு முழங்கும் ⋆
அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ॥ **1.1.2** ॥

வாழாட் பட்டு நின்றீர் உள்ளீரேல் ⋆
வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
இராக்கதர் வாழ் ⋆
இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.3** ॥

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனம் உடையீர்கள் வரம்பொழி ⋆
வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனம் உடைப் பத்தர் உள்ளீர் ! ⋆
வந்து பல்லாண்டு கூறுமினே ॥ **1.1.4** ॥

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
இருடீகேசன் தனக்கு ⋆
தொண்டக் குலத்தில் உள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
ஆயிர நாமம் சொல்லி ⋆

பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே ॥ **1.1.5** ॥

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
திருவோணத் திருவிழவில் அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே ॥ **1.1.6** ॥

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி ⋆
திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
ஆயிரந் தோளும் பொழி குருதி பாய ⋆
சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.7** ॥

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
என்னை வெள்ளுயிர் ஆக்க வல்ல ⋆
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.8** ॥

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக் கருமம் திருத்தித் ⋆
திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.9** ‖

எந்நாள் எம்பெருமான் ⋆
உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட அந்நாளே ⋆
அடியோங்கள் அடிக்குடில் ⋆
வீடு பெற்றுய்ந்தது காண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
திருமதுரையுள் சிலைகுனித்து ⋆
ஐந்தலைய பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.10** ‖

‡ அல்வழக்கொன்றும் இல்லா ⋆
அணி கோட்டியர் கோன் ⋆
அபிமான துங்கன் செல்வனைப்போலத் ⋆
திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
நாமம் பல பரவி ⋆
பல்வகையாலும் பவித்திரனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுவனே ‖ **1.1.11** ‖

‡ பல்லாண்டென்று பவித்திரனைப் ⋆
பரமேட்டியை ⋆
சார்ங்கம் என்னும் வில்லாண்டான் தன்னை ⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் ⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பல்லாண்டும் பரமாத்மனைச் ⋆
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே ‖ **1.1.12** ‖

## பெரிய திருமொழி – அன்றாயர்

‡ அன்றாயர் குலக் கொடியோடு ⋆
அணி மா மலர் மங்கையொடன்பளவி ⋆
அவுணர்க்கென்றானும் இரக்கம் இலாதவனுக்கு ⋆
உறையும் இடம் ஆவது ⋆
இரும் பொழில் சூழ் நன்றாய புனல் நறையூர் திருவாலி குடந்தை ⋆
தடம் திகழ் கோவல் நகர் ⋆
நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தாற்கிடம் ⋆
மா மலை ஆவது நீர் மலையே ‖ **2.4.1** ‖

காண்டாவனம் என்பதோர் காடு ⋆
அமரர்க்கரையன் அது கண்டவன் நிற்க ⋆
முனே மூண்டார் அழல் உண்ண முனிந்ததுவும் ⋆
அது அன்றியும் முன் உலகம் பொறை தீர்த்தாண்டான் ⋆
அவுணன் அவன் மார்பகலம் ⋆
உகிரால் வகிர் ஆக முனிந்து ⋆
அரியாய் நீண்டான் குறள் ஆகி நிமிர்ந்தவனுக்கிடம் ⋆
மா மலை ஆவது நீர் மலையே ‖ **2.4.2** ‖

அல மன்னும் அடல் சுரி சங்கம் எடுத்து ⋆
அடல் ஆழியினால் அணி ஆர் உருவின் ⋆
புல மன்னு வடம் புனை கொங்கையினாள் ⋆
பொறை தீர முனாள் அடுவாள் அமரில் ⋆
பல மன்னர் படச் சுடர் ஆழியினைப் ⋆
பகலோன் மறையப் பணி கொண்டணி சேர் ⋆
நில மன்னனும் ஆய் உலகாண்டவனுக்கிடம் ⋆
மா மலை ஆவது நீர் மலையே || **2.4.3** ||

தாங்காததோர் ஆள் அரியாய் ⋆
அவுணன் தனை வீட முனிந்தவனால் அமரும் ⋆
பூங்கோதையர் பொங்கெரி மூழ்க விளைத்து ⋆
அது அன்றியும் வென்றி கொள் வாள் அமரில் ⋆
பாங்காக முன் ஐவரொடன்பளவிப் ⋆
பதிற்றைந்திரட்டிப் படை வேந்தர் பட ⋆
நீங்காச் செருவில் நிறை காத்தவனுக்கிடம் ⋆
மா மலை ஆவது நீர் மலையே || **2.4.4** ||

மாலும் கடல் ஆர மலைக் குவடிட்டணை கட்டி ⋆
வரம்புருவ மதி சேர் ⋆
கோல மதிள் ஆய இலங்கை கெடப் ⋆
படை தொட்டொரு கால் அமரில் அதிர ⋆
காலம் இது என்றயன் வாளியினால் ⋆
கதிர் நீள் முடி பத்தும் அறுத்தமரும் ⋆
நீல முகில் வண்ணர் எமக்கிறைவற்க்கிடம் ⋆
மா மலை ஆவது நீர் மலையே || **2.4.5** ||

பார் ஆர் உலகும் பனி மால் வரையும் ⋆
கடலும் சுடரும் இவை உண்டும் ⋆
எனக்காராதென நின்றவன் எம் பெருமான் ⋆
அலை நீர் உலகுக்கரசாகிய ⋆
அப்பேரானை முனிந்த முனிக்கரையன் ⋆
பிறர் இல்லை நுனக்கெனும் எல்லையினான் ⋆
நீர் ஆர் பேரான் நெடுமால் அவனுக்கிடம் ⋆
மா மலை ஆவது நீர் மலையே ‖ **2.4.6** ‖

புகர் ஆர் உரு ஆகி முனிந்தவனைப் ⋆
புகழ் வீட முனிந்துயிர் உண்டு ⋆
அசுரன் நகர் ஆயின பாழ் பட நாமம் எறிந்து ⋆
அது அன்றியும் வென்றி கொள் வாள் அவுணன் ⋆
பகராதவன் ஆயிர நாமம் ⋆
அடிப் பணியாதவனைப் பணியால் அமரில் ⋆
நிகர் ஆயவன் நெஞ்சிடந்தான் அவனுக்கிடம் ⋆
மா மலை ஆவது நீர் மலையே ‖ **2.4.7** ‖

பிச்சச் சிறு பீலி பிடித்துலகில் ⋆
பிணம் தின் மடவார் அவர் போல் ⋆
அங்ஙனே அச்சம் இலர் நாண் இலர் ஆதன்மையால் ⋆
அவர் செய்கை வெறுத்தணி மா மலர் தூய் ⋆
நச்சி நமனார் அடையாமை ⋆
நமக்கருள் செய் என உள் குழைந்தார்வமொடு ⋆
நிச்சம் நினைவார்க்கருள் செய்யும் அவற்கிடம் ⋆
மா மலை ஆவது நீர் மலையே ‖ **2.4.8** ‖

பேசும் அளவன்றிது வம்மின் நமர் ⋆
பிறர் கேட்பதன் முன் பணிவார் வினைகள் ⋆
நாசம் அது செய்திடும் ஆதன்மையால் ⋆
அதுவே நமதுய்விடம் நாள் மலர் மேல் ⋆
வாசம் அணி வண்டறை பைம் புறவில் ⋆
மனம் ஐந்தொடு நைந்துழல்வார் ⋆
மதி இல் நீசர் அவர் சென்றடையாதவனுக்கிடம் ⋆
மா மலை ஆவது நீர் மலையே ॥ **2.4.9** ॥

‡ நெடு மால் அவன் மேவிய நீர் மலை மேல் ⋆
நிலவும் புகழ் மங்கையர் கோன் ⋆
அமரில் கட மா களி யானை வல்லான் ⋆
கலியன் ஒலி செய் தமிழ் மாலை வல்லார்க்கு ⋆
உடனே விடு மால் வினை ⋆
வேண்டிடில் மேல் உலகும் எளிதாயிடும் அன்றி இலங்கொலி சேர் ⋆
கொடு மா கடல் வையகம் ஆண்டு ⋆
மதிக்குடை மன்னவராய் அடி கூடுவரே ॥ **2.4.10** ॥

## பெரிய திருமொழி – திவளும்

‡ அலம் கெழு தடக்கை ஆயன் வாய் ஆம்பற்கு ⋆
அழியுமால் என் உள்ளம் ! என்னும் ⋆
புலம் கெழு பொரு நீர்ப் புட்குழி பாடும் ⋆
போதுமோ நீர் மலைக்கென்னும் ⋆
குலம் கெழு கொல்லி கோமள வல்லிக் ⋆
கொடி இடை நெடு மழைக் கண்ணி ⋆
இலங்கெழில் தோளிக்கென் நினைந்திருந்தாய் ⋆
இடவெந்தை எந்தை பிரானே ॥ **2.7.8** ॥

## பெரிய திருமொழி – மான் கொண்ட

ஓடா அரியாய் ⋆
இரணியனை ஊன் இடந்த ⋆
சேடார் பொழில் சூழ் ⋆
திருநீர் மலையானை ⋆
வாடா மலர்த் துழாய் ⋆
மாலை முடியானை ⋆
நாள் தோறும் நாடி ⋆
நறையூரில் கண்டேனே ॥ **6.8.4** ॥

## பெரிய திருமொழி – கறவா மடநாகு

கதியேல் இல்லை ⋆
நின் அருள் அல்லதெனக்கு ⋆
நிதியே ! ⋆
திருநீர்மலை நித்திலத் தொத்தே ⋆
பதியே பரவித் தொழும் ⋆
தொண்டர் தமக்குக் கதியே ⋆
உன்னைக் கண்டு கொண்டு ⋆
உய்ந்தொழிந்தேனே ॥ **7.1.7** ॥

## பெரிய திருமொழி – தெள்ளியீர்

‡ அருவி சோர் வேங்கடம் ⋆
நீர் மலை என்று வாய் வெருவினாள் ⋆
மெய்யம் வினவி இருக்கின்றாள் ⋆
பெருகு சீர்க் ⋆
கண்ணபுரம் என்று பேசினாள் உருகினாள் ⋆

உள் மெலிந்தாள் ⋆
இது என் கொலோ ‖ **8.2.3** ‖

### பெரிய திருமொழி – பொன்னிவர் மேனி

மஞ்சுயர் மா மதி தீண்ட நீண்ட ⋆
மாலிருஞ்சோலை மணாளர் வந்து ⋆
என் நெஞ்சுள்ளும் கண்ணுள்ளும் நின்று நீங்கார் ⋆
நீர் மலை யார் கொல் நினைக்க மாட்டேன் ⋆
மஞ்சுயர் பொன் மலை மேல் எழுந்த ⋆
மா முகில் போன்றுளர் வந்து காணீர் ⋆
அஞ்சிறைப் புள்ளும் ஒன்றேறி வந்தார் ⋆
அச்சோ ஒருவர் அழகியவா ! ‖ **9.2.8** ‖

### பெரிய திருமொழி – ஒருநல் சுற்றம்

‡ ஒருநல் சுற்றம் ⋆
எனக்குயிர் ஒண் பொருள் ⋆
வருநல் தொல் கதி ⋆
ஆகிய மைந்தனை ⋆
நெருநல் கண்டது ⋆
நீர்மலை இன்று போய் ⋆
கருநெல் சூழ் ⋆
கண்ண மங்கையுள் காண்டுமே ‖ **10.1.1** ‖

### திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – திருநெடுந்தாண்டகம்

கார் வண்ணம் திருமேனி கண்ணும் வாயும் ⋆
கைத்தலமும் அடி இணையும் கமல வண்ணம் ⋆
பார் வண்ண மட மங்கை பத்தர் பித்தர் ⋆

பனி மலர் மேல் பாவைக்குப் பாவம் செய்தேன் ⋆
ஏர் வண்ண என் பேதை என் சொல் கேளாள் ⋆
எம் பெருமான் திருவரங்கம் எங்கே என்னும் ⋆
நீர் வண்ணன் நீர் மலைக்கே போவேன் என்னும் ⋆
இதுவன்றோ நிறை அழிந்தார் நிற்குமாறே ‖ **18** ‖

## பூதத்தாழ்வார் அருளிச்செய்த – இரண்டாம் திருவந்தாதி

பயின்றதரங்கம் திருக்கோட்டி ⋆
பன்னாள் பயின்றதுவும் ⋆
வேங்கடமே பன்னாள் ⋆
பயின்றதணி திகழும் சோலை ⋆
அணி நீர் மலையே ⋆
மணி திகழும் வண் தடக்கை மால் ‖ **46** ‖

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – சிறிய திருமடல்

கணமங்கை
காரார் மணி நிறக் கண்ணனூர் விண்ணகரம் ⋆
சீரார் கண புரம் சேறை திருவழுந்தூர் ⋆
காரார் குடந்தை கடிகை கடல் மல்லை ⋆
ஏரார் பொழில் சூழ் இடவெந்தை நீர்மலை ⋆
சீராரும் மாலிரும் சோலை திருமோகூர் ‖ **37** ‖

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – பெரிய திருமடல்

நீர்மலை மேல்
மன்னு மறை நான்கும் ஆனானை ⋆
புல்லாணித் தென்னன் தமிழை வட மொழியை ⋆

நாங்கூரில் மன்னு மணி மாடக் கோயில் மணாளனை ⋆
நல் நீர்த் தலைச்சங்க நாண் மதியை ‖ **72** ‖

**திரு அணிமாமலர்மங்கை சமேத கல்யாண நீர்வண்ணன் திருவடிகளே சரணம்**

**திரு ரங்கநாயகி சமேத ரங்கநாதன் திருவடிகளே சரணம்**

**திரு சாந்தநரசிம்கன் திருவடிகளே சரணம்**

**திரு த்ரிவிக்ரமன் திருவடிகளே சரணம்**